கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

திங்கள் இருமுறை ● திருவள்ளுவர் ஆண்டு 2057, - செப்டம்பர் 25, 2026

Fortnightly E-paper ● September 25, 2026



விடை சொல்லுமா இடைத்தேர்தல் ?

சுப.வீரபாண்டியன்

கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

திங்கள் இருமுறை ● திருவள்ளுவர் ஆண்டு 2057, - செப்டம்பர் 25, 2026 Fortnightly E-paper ● September 25, 2026

விடை சொல்லுமா இடைத்தேர்தல் ?

சுப.வீரபாண்டியன்

எத்தனையோ இடைத்தேர்தல்கள் வந்து போயிருக்கின்றன! ஆனால் வரும் அக்டோபர் 6 ஆம் தேதி மதுராந்தகம், தாராபுரம் ஆகிய இடங்களில் நடைபெறவிருக்கும் இடைத்தேர்தல்கள், இதுவரையில் இல்லாத சில கூறுகளைக் கொண்டவை!

பொதுவாக, சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர் யாரேனும் எதிர்பாராமல் மறைந்து விட்டால் இடைத்தேர்தல் வரும். இப்போது ஜனநாயகம் இறந்து போய்விட்டதால் இடைத்தேர்தல் வந்திருக்கிறது!

வெற்றி பெற்ற அதே வேட்பாளர், அதே தொகுதியில், தேர்தல் நடந்த நான்கு மாதங்களுக்குள் மறுபடியும் வேறு ஒரு கட்சியின் சார்பில் போட்டியிடும் தேர்தல் இது!

தான் வெற்றி பெற்ற கட்சி ஆளுங்கட்சியாக வரவில்லை என்றவுடன், பதவி விலகி, வேறு ஒரு கட்சிக்குத் தாவி, அந்தக் கட்சியின் சார்பில் மறுபடியும் தேர்தலில் போட்டியிடும் விந்தை இந்த இடைத்தேர்தல்களில் நடைபெறுகிறது!

அதிமுக, தேர்தல் முடிவுக்குப் பிறகு திமுகவுடன் கூட்டணி சேர இருப்பதாகப் பேச்சு அடிபட்டதால்தான், அந்தக் கட்சியிலிருந்து விலகி விட்டோம் என்கிறார்கள்! அப்படியானால் விலகிய பிறகு சுயேசையாக அல்லவா போட்டியிட்டு இருக்க வேண்டும்!

தங்களை எந்தக் கட்சி வெற்றி பெற வைத்துச் சட்டமன்றத்திற்கு அனுப்பியதோ, அந்தக் கட்சியைத் தீய சக்தி என்று கூட இல்லை, தீய்ந்து போன சக்தி என்று வருணித்த ஒருவர் தலைமையிலான கட்சியில் போய் எப்படிச் சேர்ந்தார்கள்?

வரும் இடைத்தேர்தல்களில் த.வெ.க படுதோல்வி அடைந்தால், ஜனநாயகமும் , நியாயமும் இன்னும் இம்மண்ணில் இருக்கின்றன என்று பொருள்!



வரும் இடைத்தேர்தல்களில் த.வெ.க படுதோல்வி அடைந்தால், ஜனநாயகமும், நியாயமும் இன்னும் இம்மண்ணில் இருக்கின்றன என்று பொருள்!

தப்பித்தவறி அக்கட்சி வெற்றி பெற்று விட்டால், தமிழ்நாட்டில் ஜனநாயகமும், நியாயமும் குழி தோண்டிப் புதைக்கப்பட்டு விட்டன என்று பொருள்!

தப்பித்தவறி அக்கட்சி வெற்றி பெற்று விட்டால், தமிழ்நாட்டில் ஜனநாயகமும், நியாயமும் குழி தோண்டிப் புதைக்கப்பட்டு விட்டன என்று பொருள்!

இரண்டில் எது நடைபெறப்போகிறது? தமிழ்நாடு இப்போது என்னவாக இருக்கிறது?

விடை சொல்லும் இடைத்தேர்தல்கள்!

கருஞ்சட்டைப் பதிப்பகம் - நூல் வெளியீடு



கருஞ்சட்டைப் பதிப்பகத்தின் சார்பில் 17-09-2026 அன்று நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. பேராசிரியர் இரா சுப்ரமணி அவர்களின் கடின உழைப்பால் உருவான 3000 பக்கங்களுக்கும் கூடுதலாக மூன்று தொகுப்புகளாக வெளிவந்திருக்கும் பெரியார் எனும் நூல் அறிமுக விழா நிகழ்ச்சி அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கில் மிகச் சிறப்பாக நடந்தேறியது! அரங்கம் நிறைந்த கூட்டம், அதிக அளவில் புத்தக விற்பனை, மதிப்புமிகு ஆ. ராசா அவர்கள் 'இதழியல் களத்தில் பெரியார்' எனும் தலைப்பில் ஆற்றிய காத்திரமான உரை வீச்சு நேற்று இரவில் இருந்து இருபதுக்கும் மேற்பட்ட வலையொளிகளில் லட்சக்கணக்கானவர்களை சென்றடைந்துள்ளது.

நம் இனத்தின் மதிப்புறுத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அன்புடன் அனுப்பியிருந்த வாழ்த்து மடலும், கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ . இராசா MP அவர்களின் ஆழ்ந்த ஆய்வுரையும், பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்களின் மிகத் தெளிவான உரையும் விழாவிற்கு பெருமை சேர்த்தன.

விழாவுக்கு தமிழ் நாட்டின் போற்றத் தகுந்த ஆளுமைகள் பலர் வந்திருந்து சிறப்பித்தமை மகிழ்ச்சிக்கு உரியது.

பெரியாரின் கொள்கைகளை இளந் தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கும் வேலையைத் தொடர்ந்து செய்வோம்.

விழா சிறக்க காரணமானவர்கள் அனைவருக்கும் பேரன்பும் நன்றியும்.


'பெல்' இராசன்,

பதிப்பக இயக்குநர்

தலைவரின் பாராட்டு







நேற்று (17-09-2026) மாலை நம் கருஞ்சட்டைப் பதிப்பகத்தின் சார்பில் நடைபெற்ற நூல் அறிமுக விழா மிகச் சிறப்பாக நடந்தேறியது! அரங்கம் நிறைந்த கூட்டம், சிறப்பான புத்தக விற்பனை, நேற்று இரவில் இருந்து பல்வேறு வலையொளிகளில் பல்லாயிரக் கணக்கானவர்களைச் சென்றடைந்த விழா நிகழ்வுகள் என்று குறிப்பிடத்தக்க நிகழ்வாக அது அமைந்தது!

நம் கழகத்தின் தலைவர் அன்புடன் அனுப்பியிருந்த வாழ்த்து மடலும், கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ . இராசா அவர்களின் மிகத் தெளிவான உரையும் விழாவிற்கு மேலும் பெருமை சேர்த்தன!

விழாவை மிகச் சிறப்பாக நடத்திய பதிப்பகத்தின் இயக்குனர் தோழர் 'பெல்' ராஜன் அவர்களுக்கும், அவருக்குத் துணைநின்ற தோழர்களுக்கும், நம் அன்பும், பாராட்டுகளும்!

சுப.வீரபாண்டியன்

பேரவைத் தலைவர்

தெற்கு மண்டலப் பேரவையின் அரசியல் பயிலரங்கம் - 25.10.2026

தோழர்களுக்கு அன்பு வணக்கம். சென்னையில் நடைபெற்ற 17வது பொதுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவின்படி, தெற்கு மண்டலத் தோழர்களுக்கான அரசியல் பயிலரங்கம் எதிர்வரும் 25.10.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10.30 மணிக்கு திண்டுக்கல் மாநகரில் நடைபெற இருக்கிறது. ***பொதுச் செயலாளர் சிற்பி செல்வராஜ்*** *அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள இப்பயிலரங்கில் பேரவையின் தலைவர்* ***பேராசிரியர் சுப.வீரபாண்டியன்*** *அவர்கள் "மொழி சார் அரசியல்" என்ற தலைப்பில் உரையாற்றுகிறார்.* ***துணைப் பொதுச் செயலாளர் வழக்கறிஞர் இராம. வைரமுத்து*** *நோக்க உரை ஆற்றுகிறார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கொள்கை பரப்புச் செயலாளர் வேடச்சந்தூர் இரவி, மாவட்டச் செயலாளர் தோழர் ப.புலேந்திரன் மற்றும் திண்டுக்கல் மாவட்டத் தோழர்கள் செய்து வருகின்றனர். பயிலரங்கில் பங்கேற்க விரும்பும் தங்கள் மாவட்டத் தோழர்களின் பெயர் பட்டியலை இம்மாத இறுதிக்குள் துணைப் பொதுச் செயலாளரிடம் வழங்குமாறு தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டச் செயலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். நன்றி*

வழக்கறிஞர் இராம. வைரமுத்து

துணைப் பொதுச் செயலாளர் மற்றும் தெற்கு மண்டலப் பொறுப்பாளர்,
திராவிட இயக்கத் தமிழர் பேரவை, மதுரை.

வடக்கு மண்டலக் கலந்துரையாடல்

கடந்த 13.09.2026 ஞாயிற்றுக் கிழமை காலை 11 மணியளவில் வடக்கு மண்டல மாவட்டப் பொறுப்பாளர்களுடன் 'வாட்ஸ் அப் குழு வீடியோ' வழி கலந்துரையாடல் நடைபெற்றது.

1) உறுப்பினர் கட்டணம், திராவிட முழக்கம் சந்தா,

2) திராவிடப் பள்ளி விழா,

3) பேரவை 20ஆம் ஆண்டு விழா,

4) இடைத் தேர்தல் (மதுராந்தகம்)

5) திராவிட முழக்கம் ஒரு பக்க விளம்பரம் ஆகியவை குறித்துப் பேசப்பட்டன.

1) திராவிடமணி, சென்னை மாவட்டத் தலைவர்.

2) சிலம்பரசன், தலைவர்,காஞ்சிபுரம்.

3) மோகன்ராம், தலைவர், திருவள்ளூர்/அம்பத்தூர்.

4)சாந்தசீலன், தலைவர், அன்பு செயலாளர் செங்கல்பட்டு.

5) தமிழ்வாணன், அமைப்பாளர், இராணிப்பேட்டை இவர்களுடன் பொதுச்செயலாளர் சிற்பி செல்வராசு, தோழர்கள் எட்வின், திராவிட மங்கை ஆகியோர் கலந்து கொண்டனர்.

20-09-2020ஆம் தேதிக்குள் உறுப்பினர் கட்டணம், பெயர், தொடர்புஎண் அடங்கிய பட்டியல், திராவிட முழக்கம் ஆண்டுக் கட்டணம் அனுப்ப வேண்டும்.

31-10-2029அன்று நடைபெற உள்ள திராவிடப் பள்ளி 7 ஆம் ஆண்டு தொடக்க விழா விழாவில் பங்குபெற வேண்டும், அன்று காலை பேரவைத் தலைமை அலுவலகத்தில் தலைவருடன் நடைபெறும், வடக்கு மண்டல பொறுப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்பவை உள்பட பேரவையின் 20ஆவது ஆண்டு விழா, மதுராந்தகம் இடைத்தேர்தல், திராவிட முழக்கத்திற்கு விளம்பரம் உள்ளிட்டவைகள் குறித்து கலந்துரையாடப் பட்டன.

இரா.உமா,

துணைப் பொதுச் செயலாளர், வடக்கு மண்டல பொறுப்பாளர்.

திராவிட இயக்கத் தமிழர் பேரவை, சென்னை.

பெரியார் 148 திருப்பத்தூர்



திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடியில் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சார்பில் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் பிறந்தநாள் விழா 17-09-2026 அன்று கொண்டாடப்பட்டது. விழாவில் திருப்பத்தூர் மாவட்டத் தலைவர் ராஜசேகர் தலைமையில் பேரவையின் தோழர்கள் மற்றும் திராவிட நட்புக் கழகத்தின் தோழர்கள் ஐயாவின் படத்திற்கு மாலை அணிவித்து பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கி மகிழ்ந்தனர்.

பெரியார் 148 வாலாசாபேட்டை



17/9/2026 அன்று பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 148ஆம் பிறந்த நாளையொட்டி வாலாசாப்பேட்டை ஒன்றிய அலுவலகத்தில் உள்ள பெரியார் சிலைக்குத் திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை, திராவிடர் கழகம், திமுகழகம் இணைந்து மாலை அணிவித்து முழக்கமும், சமூக நீதிநாள் உறுதிமொழி எடுக்கப்பட்டது.

பெரியார் 148 நெய்வேலி



திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பில் 17-09-2026 அன்று நெய்வேலி, மேட்டுக்குப்பம் பகுதியில் தந்தைபெரியார் பிறந்த நாளையொட்டி இனிப்புகள் வழங்கினர் தோழர்கள்.

ஈரோடு அண்ணா பிறந்தநாள்



15-09-2026 அறிஞர் அண்ணா பிறந்தநாள் முன்னிட்டு முன்னிட்டு ஈரோடு பன்னீர் செல்வம் பூங்காவில் அமைந்துள்ள அண்ணா சிலைக்கு திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. பேரவை நிர்வாகிகள் கு.சேகர், அ. தமிழ்க்குமரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

பெரியார் 148 - ஆவாரம்பாளையம்



செப் 17, கோவை, ஆவாரம்பாளையம் பகுதியில் திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பில் தந்தை பெரியார் அறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா, சமூக நீதி நாள் விழா

தலைமை : தோழர் ப.கௌதம், மாணவர் அணி

தொடக்கப் பாடல் : பாடகர் கன்னையா

வரவேற்புரை: மா. கணேச மூர்த்தி, மாநகர மாவட்ட செயலாளர்.

சமூக நீதி நாள் உறுதிமொழி : ஆவை கோபிநாத்,
துணை பொதுச் செயலாளர், மேற்கு மண்டலம்.

இனிப்பு வழங்கல் :
கோவை மாநகர மாவட்ட செயலாளர் மரியாதைக்குரிய துரை.செந்தமிழ் செல்வன் அவர்கள்.

நன்றியுரை
தோழர்.செந்தில்குமார்,
கோவை வடக்கு மாவட்ட துணை செயலாளர்

முன்னிலை : இளைஞர் அணி பிரகதீஷ் கண்ணன், மோகன்ராஜ், ஜெகதீஷ், பாலன் உள்ளிட்ட திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் கோவை மாவட்ட தோழர்கள்

இவ்விழாவில் திமுக நிர்வாகிகள், முற்போக்கு இயக்கங்கள் கட்சிகளின் தோழர்கள் பங்கேற்று சிறப்பித்தார்கள்.

பெரியார் 148 - பெரியநாயக்கன் பாளையம்



செப் 17, கோவை, பெரியநாயக்கன்பாளையம், வீரபாண்டி பிரிவில் திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பில் தந்தை பெரியார் அறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா, சமூக நீதி நாள் விழா

தலைமை : தோழர்.ஹரி, மாவட்ட இளைஞர் அணி

வரவேற்புரை: தோழர்.ஆண்டனி,
பெரியநாயக்கன்பாளையம் ஒன்றிய செயலாளர்..

சிறப்புரை : காசு.நாகராசன்,
தலைமைச் செயற்குழு உறுப்பினர்..

சமூக நீதி நாள் உறுதிமொழி : ஆவை கோபிநாத்,
துணை பொதுச் செயலாளர், மேற்கு மண்டலம்.

இனிப்பு வழங்கல் : கூடலூர் நகராட்சித் தலைவர்,
மரியாதைக்குரிய அ .அறிவரசு.BE.BL அவர்கள்.

நன்றியுரை: தோழர். தம்புராஜ்,
கோவை வடக்கு மாவட்ட பொருளாளர்.

முன்னிலை :
கல்பனா, சுமித்ரா, செந்தில்குமார் உள்ளிட்ட திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் கோவை மாவட்ட தோழர்கள்..

இவ்விழாவில் திமுக நிர்வாகிகள், முற்போக்கு இயக்கங்கள் கட்சிகளின் தோழர்கள் பங்கேற்று சிறப்பித்தார்கள்.

தலைமை அலுவலகம்



திராவிட இயக்கத் தமிழ் பேரவை தலைமை அலுவலகத்தில் 15-09-2026 அன்று பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டுப் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன் தலைமையில் மாலை அணிவித்துப் புகழ் வணக்கம் செலுத்தப்பட்டது . உடன் தோழர்கள் எட்வின், மனோகரன், முத்தையா குமரன், லோகபாலன், இளங்கோவன் ஆகியோர்.